# மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்

**2015 நவம்பர் மாதம் 24 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு**

## நிகழ்ச்சி நிரல்

**I.** **தவிசாளரின் அறிவிப்புக்கள்**

**II.** **அறிக்கைகளையும், ஆவணங்களையும், சமர்ப்பித்தல்**

**III.** **செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்**

**IV.** **மனுக்கள்**

**V.** **கேள்விகள்**

**01.** **கௌரவ எம்.ரோஸ் பிரணாந்து உறுப்பினரினால் கௌரவ சுகாதார, உள்நாட்டு வைத்திய, சமூக நலன்புரி, நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவை, மகளிர் விவகாரம் அத்துடன் சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :**
**(Îæ/vi (1)15/62)**

அ. நீர்கொழும்பு வைத்தியசாலையில் தற்போது காணப்படும் வெற்றிடங்கள் எவை ?

ஆ. வைத்தியசாலையின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக நீங்கள் இது வரை எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

இ. இந்த வைத்தியசாலையின் வெற்றிடங்களை நிரப்ப தாமதமாகினால் அதற்குக் காரணம் என்ன ?

ஈ. எவ்வளவு காலத்தினுள் இந்த வெற்றிடங்களை நிரப்பி நிறைவு செய்ய எதிர்ப்பார்க்கின்றீர்கள் ?

உ. இவ் வைத்தியசாலையில் காணப்படும் வெற்றிடங்களை தகைமையுள்ளவர்களின் மூலம் நிரப்புவதை இவ் வருடம் நிறைவடைய முன் மேற்கொள்ள முடியுமா ?

ஊ. இல்லையாயின் ஏன் ?

**02.** **கௌரவ எம்.ரோஸ் பிரணாந்து உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :**
**(Îæ/vi (1)15/63)**

அ. கட்டான பிரதேச செயலாளர் பிரிவின் ரத்தொலுகம வீடமைப்புத் தொகுதியில் அரசுக்குரிய காணியில் நாணாயக்கார என்பவர் வாரச் சந்தையைப் பேணிச் சென்று வருமானம் பெறுகின்றார் என்பதை அறிவீர்களா ?

ஆ. அவ் வாரச் சந்தையைப் பேணிச் செல்வதற்காக ஏதாவதொரு நிதியும் கட்டான பிரதேச சபைக்கு அல்லது ஏதாவது அரச தாபனத்திற்கு செலுத்தப்படுவதில்லை என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

இ. இவ்வாறு சென்ற அரசாங்க காலத்தினுள் அரச சொத்தினை பயன்படுத்தியதன் மூலம் வாரச் சந்தையினை நடாத்தி உழைக்கப்பட்ட வருமானத்தில் அரசுக்கு செலுத்த வேண்டிய நிதியை அறவிட நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்களா ?

ஈ. இவ்வாறு அங்கீகாரமற்ற முறையில் பேணப்படும் இவ் வாரச் சந்தையை நிறுத்தவும், உரிய அரச தாபனத்தினால் ஒழுங்கான கேள்வி நடைமுறையின் மூலம் இவ் வாரச் சந்தையை பேணிச் செல்லவும் நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்களா ?

உ. இல்லையாயின் ஏன்?

**03.** **கௌரவ எம்.ரோஸ் பிரணாந்து உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :**
**(Îæ/vi (1)15/64)**

அ. கட்டான பிரதேச செயலாளர் பிரிவில் பிரதேச சபையின் எல்லையினுள் அரச நிதி ரூபா எழுபது இலட்சம் (7000000/-) செலவு செய்து வெலிஹேனவில் ஸ்தாபிக்கப்பட்ட விற்பனைத் தொகுதியின் வருமானத்தை ஜெயராஜ் பிரணாந்து புள்ளை மன்றமே பெறுகின்றது என்பதனை அறிவீர்களா ?

ஆ. அக் கடைத் தொகுதி டென்டர் நடைமுறைக்கு இணங்க வழங்கப்படவில்லை என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

இ. அக் கடைத் தொகுதியை டென்டர் நடைமுறைக்கு இணங்க வழங்க நடவடிக்கை எடுப்பீர்களா ?

ஈ. அக் கடைத் தொகுதியிலிருந்து ஜெயராஜ் பிரணாந்து புள்ளை மன்றம் பெற்றுள்ள அரசிற்கு கிடைக்க வேண்டிய வருமானத்தினை அறவிட நடவடிக்கை எடுப்பீர்களா ?

உ. இல்லையாயின் ஏன்?

**04.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு:**

**(Îæ/vi**

**(1)15/65)**

அ. i. 2011 தொடக்கம் 2015 வரை ஒவ்வொரு வருடத்திலும் மேல் மாகாண சபைக்கு உரிய பாடசாலைகளில் 1-13, 1-11, 6-13, 6-11 மற்றும் 1-5 தரங்களை உடைய பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

ii. மேலே கூறப்பட்ட பாடசாலைகளில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை, ஆசிரியர்களின் எண்ணிக்கை மற்றும் வகுப்புக்களின் எண்ணிக்கை என்பன மேற்கூறப்பட்ட வருடங்களுக்கு இணங்கியதாக வெவ்வேறாக எவ்வளவு ?

iii. மேல் மாகாணத்தின் எல்லாப் பாடசாலைகளிலும் ஒவ்வொரு பாடங்களுக்கு இணங்கவும் உயர்தரத்தில் கல்வி கற்கும் பிள்ளைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

iv. புதிதாக உயர்தர விஞ்ஞானப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ள பாடசாலைகளில் அவ் விடயங்களை கற்கும் பிள்ளைகளின் எண்ணிக்கை மற்றும் அதைக் கற்பிக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

ஆ. i. இரண்டாந் தர பாடசாலைகளின் அபிவிருத்திச் செயற்றிட்டத்திற்கு உரிய பாடசாலைகளின் பட்டியலில் குறிப்பிடப்பட்டு அதற்கு உரியதாக இவ்வேளையில் அபிவிருத்தி செய்யப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

ii. மேல் மாகாணத்தில் நடைமுறையில் உள்ள இரண்டாந் தர பாடசாலைச் செயற்றிட்டங்களில் முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்டுள்ளதா ?

iii. இச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்திய பின் இரண்டாந் தரப் பாடசாலைகளில் கல்வி கற்கும் பிள்ளைகள் பாடசாலைக் கல்விச் செயற்பாட்டில் இருந்து விலகிச் செல்வது வருடாந்தம் குறைவடைந்துள்ளதா ?

iv. அப் புள்ளி விபரங்களை இச் சபைக்கு முன்வைப்பீர்களா ?

v. இதற்கு இணங்க பிரபல்யமான பாடசாலைகளுக்கான கேள்வி 2016 ஆம் ஆண்டளவில் குறைந்துள்ளதா ?

vi. அது எவ்வளவு எண்ணிக்கை ?

**05.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு:**

**(Îæ/vi**

**(1)15/66)**

அ. i. மினுவாங்கொட வட்டாரத்திற்கு உரிய மீரிகம பண்டாரநாயக மஹா வித்தியாலயத்தின் (இணைந்த) அதிபரான மதகுரு மே மாதம் நடுப்பகுதி தொடக்கம் இடமாற்றப்பட்டுள்ளார் என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ii. அவர் இடமாற்றப்பட்டு அதற்குப் பதிலாக வேறு அதிபர் ஒருவர் நியமிக்கப்படவில்லை என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

iii. பதிலாளர் ஒருவர் இன்றி ஆசிரியர் ஒருவர் அதேபோல் அதிபர் ஒருவர் இடமாற்றம் செய்யப்பட்டது முறையற்ற செயற்பாடு என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஆ. i. நிரந்தர அதிபர் ஒருவர் இல்லாதபடியால் இப் பாடசாலையின் நிர்வாகம் மற்றும் ஒழுக்க செயற்பாடு ஏதாவதோர் முறையில் பின்னடைவுக்கு உட்பட்டுள்ளது என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ii. இப் பாடசாலைக்கு தகைமை உள்ள நிரந்தர அதிபர் ஒருவரை வழங்க நடவடிக்கை எடுப்பீர்களா ?

iii. அப்படியாயின் அது எப்போதிலிருந்து ?

**06.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு:**

**(Îæ/vi**

**(1)15/67)**

அ. i. கொழும்பு கல்வி வலையத்தில் ஒழுங்கான முறையில் ஆசிரியர்களை இடமாற்றுவதற்காக தேசிய ஆசிரிய இடமாற்ற கொள்கைக்கு இணங்க இடமாற்ற சபை ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ii. அவ்வாறு காணப்பட்டபோதும் கொழும்பு வலைய கல்விப் பணிப்பாளரினால் ஆசிரிய இடமாற்ற சபையின் அங்கீகாரம் மற்றும் இணக்கம் இன்றி வருடம் முழுவதும் இடைக்கிடையே ஆசிரிய இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. i. கொழும்பு வலையக் கல்விப் பணிப்பாளரினால் தமக்கு ஏற்ற முறையில் 2015.10.19 ஆந் திகதி மற்றும் அதற்கு அண்மித்த நாள் ஒன்றில் கொழும்பு மகாபோதி வித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவின் ஆசிரியை ஒருவர் கொழும்பு புனித ஜோன் கல்லூரிக்கு இடமாற்றப்பட்டுள்ளார் எனவும் கொட்டாஞ்சேனை மெதடிஸ் கல்லூரியில் இவ்வாறான இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனையும் நீங்கள் அறிவீர்களா?

ii. கொழும்பு வலையத்தில் தொடர்ந்தும் இடம்பெறும் இவ்வாறான ஒழுங்கற்ற ஆசிரிய இடமாற்றத்தினை நிறுத்த நடவடிக்கை எடுப்பீர்களா ?

iii. இல்லையாயின் ஏன் ?

**07.** **கௌரவ கே.டி. அறுணதீபால் உறுப்பினரினால் கௌரவ சுகாதார, உள்நாட்டு வைத்திய, சமூக நலன்புரி, நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவை, மகளிர் விவகாரம் அத்துடன் சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :**
**(Îæ/vi (1)15/68)**

அ. 2016 ஆம் ஆண்டில் வரவு செலவுத் திட்ட பிரேரணையினைத் தயாரிக்கும் போது கௌரவ மாகாண சபை உறுப்பினர் சஹன் பிரதீப் அவர்களினால் பிரேரணை தெரிவிக்கப்பட்ட படி மாகாண சபை உறுப்பினர்களுக்காக விடயப் பயிற்சி டிப்ளோமா அல்லது உயர் தர டிப்ளோமாவைப் பயிலுவதற்காக நிதி ஏற்பாட்டினை ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

ஆ. அப்படியாயின் எந்த தாபனத்தில் உரிய பாடநெறியைக் கற்பதற்காக ?

இ. ஒருவருக்கு ஏற்படும் செலவு யாது ?

ஈ. வருடத்திற்கு எத்தனை உறுப்பினர்களுக்கு சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுக்க எண்ணப்பட்டுள்ளது ?

உ. பாடநெறி தொடர்பான தகவல்கள் பெறப்பட்டு உள்ளதா ? அப்படியாயின் எவ்வளவு காலம் ?

ஊ. இந்த மாகாண சபையை முதலாவது முறையாக அங்கத்துவப்படுத்திய உறுப்பினர்களுக்கு முதலாவதாக இச் சந்தர்ப்பத்தினை பெற்றுக் கொடுப்பது சிறந்தது என்பதனை நீங்கள் நம்புகின்றீர்களா ?

**08.** **கௌரவ ரஜித ரங்கன ஹபுஆரச்சி உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :**

**(Îæ/vi**

**(1)15/69)**

அ. 2015 ஆம் ஆண்டில் இளைஞர் நடவடிக்கைக்காக எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது ?

ஆ. மேல் மாகாணத்தில் இளைஞர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் எவ்வளவு அளவிலானவர்கள் இருக்கின்றனர் ?

இ. நிதி ஒதுக்கப்படவில்லையாயின் அல்லது இளைஞர் நடவடிக்கையினை மேற்கொள்ள உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படாத விடத்து உங்களது அமைச்சின் கீழ் இளைஞர் நடவடிக்கை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதினால் மேல் மாகாண மக்களுக்கு ஏற்படும் சேவை யாது ?

ஈ. இளைஞர் நடவடிக்கை தொடர்பான அமைச்சின் பொறுப்புக்களும் கடமைகளும் எவை ?

உ. எதிர்வரும் வருடத்திற்குரிய இளைஞர் நடவடிக்கை தொடர்பாக உங்களது பிரேரணைகள் எவை ?

**09.** **கௌரவ மஞ்சு சிறீ அரங்கல - எதிர்க் கட்சித் தலைவரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Ïæ/vi (1)15/70)**

அ. ஹோமாகம பிரதேச சபைக்கு உரிய வாரச் சந்தை கேள்வி நடைமுறைக் கோரப்பட்டு தனியார் பிரிவினருக்கு வழங்க எண்ணப்பட்டுள்ளதா ?

ஆ. அண்மையில் திறந்து வைக்கப்பட்ட வாரச் சந்தையில் ஹோமாகம பிரதேச சபையினால் புதிதாக கடை அறைகளை நிர்மாணிக்கும் உத்தேசம் காணப்படுகின்றதா ?

இ. இருந்தால் அது எந்த நோக்கத்தில் ?

ஈ. ஹோமாகம பொதுச் சந்தை தொகுதியின் பின்னால் காணப்படும் வெற்றுக் காணித் துண்டில் கட்டணத்தினை அறவிடும் வாகனத் தரிப்பிட பிரிவொன்றுக்காக கேள்வி கோரப்பட்டுள்ளதா ?

உ. பொதுச் சந்தைத் தொகுதியின் முன்பக்கம் காணப்படும் வெற்றுக் காணி தொடர்பாக ஏதாவது நடவடிக்கை ஒன்று எடுப்பீர்களா ? அப்படியாயின் அது என்ன ?

ஊ. சுமார் 15 வருட காலந் தொடக்கம் பொது வியாபாரக் கட்டடத் தொகுதியின் முன்னால் உள்ள பகுதியில் பேணப்படும் முச்சக்கர வண்டி, லொறி மற்றும் பிற வாகனங்களை நிறுத்துவதற்கான வாகனத் தரிப்பிடம் தொடர்பாக ஏதாவது நடவடிக்கை எடுப்பீர்களா ?

எ. இவ்விடத்தில் வாகனத் தரிப்பிடத்தினை ஏற்படுத்தியதன் மூலம் பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் மகளிர் பணிமனையில் பதிவு செய்யப்பட்ட மகளிர் இயக்கங்களின் உற்பத்திகளை விற்பனைக்காக வழங்கப்பட்டுள்ள விற்பனைக் கருமபீடங்களுக்கு உரிய இட வசதி இல்லாமல் போவதுடன் அதற்காக எடுக்கும் நடவடிக்கை யாது ?

ஏ. இதற்கு இணங்க பொதுச் சந்தைத் தொகுதியின் முன்னால் காணப்படும் காணி தொடர்பாக எடுக்கும் நடவடிக்கையினைத் தெளிவுபடுத்துவீர்களா ?

**10.** **நடவடிக்கை ஒழுங்கு விதி இல 31(அ) (1) ஏற்பாடுகளுக்கு இணங்க பதில் கொடுப்பதற்கு காலம் கேட்கப்பட்ட கேள்வி**

- **கௌரவ லக்ஷ்மன் நிபுணாரச்சி உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சரிடம் 2015.11.17 ஆந் திகதி சபை ஒத்திவைப்பு வேளையில் கேட்கப்பட்ட கேள்வி :** **(கே/vi (1)15/ADG-01)**

அ. கெஸ்பேவ நகர சபைக்கு உரிய மடபாத சவ்லத்லாராம வீதியில், மிரிஸ்வத்த திசையில் காணப்படும் வீதியின் ஒரு பகுதி மற்றும் அலுபோகஹவத்தை வீதியை கொங்கிறீட் இட்டு மேம்படுத்துவது கமநெகும இன் கீழ் 1,430,636.45 மதிப்பீடு ஒன்றுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. அங்கு ஒப்பந்தம் செய்யப்பட்ட சங்கங்கள் அல்லது தாபனங்கள் எவை ?

இ. வேலை நிறைவு செய்யப்பட்ட தினம் எது ?

ஈ. முறைகேடு ஒன்று ஏற்பட்டுள்ள படியால் இது வரை நிதி செலுத்தப்பட வில்லை எனபதனை அறிவீர்களா ?

உ. இவ்வேளையில் நிதியினைச் செலுத்துமாறு நிர்ப்பந்தம் காணப்படுகின்றதா ?

ஊ. உள்ளூராட்சி ஆணையாளர் எடுக்கும் நடவடிக்கை என்ன ?

எ. இல்லையாயின் ஏன் ?

## VI. வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை

## VII. அமைச்சுக்களின் அறிவிப்புக்களும்/அமைச்சர்களின் தகவல்களும்

## VIII. தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்

## IX. சபைக் கூட்டம் I

**கௌரவ சபை நடவடிக்கை அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு :**

பிரேரணை :

"2015.11.03 **ஆந்** திகதி வரப்பட்ட சபை இணக்கத்திற்கு இணங்க இன்றைய தினம் கலைந்து சென்ற பின் இச் சபையானது 2015 **டிசெம்பர் மாதம் 15 ஆந் திகதி** மு.ப. 09.00 **க்கு** கூட வேண்டும்."

### சபைக் கூட்டம் II

**கௌரவ சபை நடவடிக்கை அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு :**

பிரேரணை :

"2016 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்று தொடர்பான விவாதம் மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகளுக்காக நடவடிக்கை ஒழுங்குவிதி இல 50(5) இல் குறிப்பிடப்பட்ட கால வேறுபாட்டினால் எந்தவொரு தடையும் ஏற்படக் கூடாது."

## X. பொது நடவடிக்கை

**01. கௌரவ இசுர தேவப்பிரிய - முதலமைச்சர் அத்துடன் நிதித் திட்டமிடல் ,சட்டம் ,ஒழுங்கு ,நீர் வழங்கல் வடிகாலமைப்பு மற்றும் உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு மின்சகத்தி மற்றும் மின்வலு , உல்லாசத் துறை அமைச்சரினால் (மே.மா) சமர்ப்பிக்கப்படுவதற்கு**

*"2016 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றினை அங்கீகரிக்க வேண்டும்"*

( நிதிக் கூற்றினை சபைக்கு சமர்ப்பித்தல். )

**02. கௌரவ இசுர தேவப்பிரிய - முதலமைச்சர் அத்துடன் நிதித் திட்டமிடல் ,சட்டம் ,ஒழுங்கு ,நீர் வழங்கல் வடிகாலமைப்பு மற்றும் உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு மின்சகத்தி மற்றும் மின்வலு , உல்லாசத் துறை அமைச்சரினால் (மே.மா) சமர்ப்பிக்கப்படுவதற்கு**

*"2016 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்குரிய ஒதுக்கீட்டு நியதிச் சட்டத்தினை அங்கீகரிக்க வேண்டும்"*

( ஒதுக்கீட்டு நியதிச் சட்டத்தினை சபைக்கு சமர்ப்பித்தல். )

## XI. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

2015.11.17 ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, Bஅலகு,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.